**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 48/2020**

**வா.சா.1 – முத்தையா** **12.2.2025**

**குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்து ஆதியில் கண்ணப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. கண்ணப்பனின் வாரிசுகள் பெரியாம்பிள்ளை, பூச்சி, சிலம்பன் ஆகியோர் தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் கண்ணப்பன் வகையறாவிற்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தான சர்வே எண் 143/4ல் ஒரு பகுதியை பொறுத்து ஏற்கனவே மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.95/2015 வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இருந்து வருவதாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ராமசாமியிடமிருந்து இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ராமமூர்த்தி பெற்ற கிரையம் செல்லாது என பரிகாரம் கோரியிருந்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நாங்கள் கோரியிருந்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை பொறுத்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் பேரில் இந்த பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 224/2019 தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 95/2015 தீர்ப்பின் பேரில் நாங்கள் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேல்முறையீட்டு வழக்கு எண் 224/2019ல் இந்த

பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் பேரில் நாங்கள் உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை